Reg. No. 1-M.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

AUGUST 26, 1930.

ந. 34.] மதராஸ்: செவ்வாய்கிழமை மாலை, 1930-௵ ஆகஸ்ட்௴ 26௳. [PRICE, 6 *pies*.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லா டிபார்ட்மெண்ட்

(ஜெனரல்).

விளம்பரங்கள்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1930-ம்௵ ஆகஸ்ட்௴ 6௳.

நெ. 638.—1923-ம்௵ மார்ச்௴ 20௳ யுள்ள **போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம்** பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா (ஜெனரல்) டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில், (1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்ய உத்தேசிக்கும் திருத்தத்தின் அடியிற்கண்ட மசோதாவானது - அதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரியும் பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1930-ம்௵ அக்டோபர்௴ 1௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப் படுமென்றும், அந்த மசோதா விஷயமாய் மேலே கண்ட தேதிக்குமுன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்துசேரக்கூடிய எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகள் அல்லது ஆட்சேபனைகளைப் பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்களென்றும் இதனால் அறிக்கையிடப்படுகிறது :—

மசோதா திருத்தம்.

ஷை விதிகளைச் சேர்ந்த 30 K விதிக்குப் **பர்த்தியாக** அடியிற்கண்டதை **அமைத்துக்கொள்ளவேண்டும்**; அதாவது :—

“30 K. (1) குறித்த யாதொரு பாதையிலாகிலும் குறித்த யாதொரு மணிநேரத்திலாகிலும் பஸ்ஸுகள் மேல்விசாரணைக்குட்படாமல் ஓடுவது பொதுஜனங்களுக்குத் தொந்தரவையாவது ஆபத்தையாவது உண்டாக்கக்கூடுமென்று G அனுமதிச்சீட்டு கொடுக்கும் அதிகாரி அபிப்பிராயப்படுவாரானால், அவர் காலங்களைக் குறிப்பிடும் பட்டி ஒன்றை அப்போதைக்கப்போது நிர்ணயிக்கலாம்.

(2) அந்தப்படி காலங்களைக் குறிப்பிடும் பட்டி ஒன்று நிர்ணயிக்கப்பட்டிருக்குமானால், ஒவ்வொரு மோடார் பஸ்ஸும்—

(a) விபத்தினாலாவது தவிர்க்கமுடியாத வேறே யாதொரு காரணத்தினாலாவது தடுக்கப்பட்டாகிலும்,

(b) G அனுமதிச்சீட்டு கொடுக்கும் அதிகாரியால் எழுத்துமூலமாக வேறே விதமாய் அதிகாரம் கொடுக்கப்பட்டாகிலும்

இருந்தாலன்றி மற்றப்படி, அந்தப்பட்டியை அனுசரித்து ஓடவேண்டும்.

(3) விபத்து காரணமாகவாவது தவிர்க்க முடியாத வேறே யாதொரு காரணமாகவாவது ஷை மோடார் பஸ்ஸானது எப்போதாகிலும் ஓடாதபடி தடுக்கப்பட்டாலும் நிர்ணயிக்கப் பட்ட காலங்களை அனுசரித்துப்போகாதபடி தடுக்கப்பட்டாலும், G அனுமதிச்சீட்டு கொடுக்கும் அதிகாரிக்கு உடனே ரிபோர்ட் அனுப் பவேண்டும்.

(4) G அனுமதிச்சீட்டு வைத்துக்கொண் டிருப்பவர் (2), (3) குறிப்பிட்ட உபவிதிகளை மீறி நடப்பதற்காக உத்தரவாதியாவதுமல்லாமல் தண்டிக்கப்படத்தக்கவருமாவார்."

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ௵
ஆகஸ்ட் ௴ 7௳.

நெ. 639.—(1914-ம் ௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம் ௵ மார்ச் ௴ 20௳யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லாடிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் செய்யும்படி அடியிற்கண்ட திருத்தத்தைக் களிகூர்ந்து வெளிவிடுகிறார்கள் :—

திருத்தம்.

'G' அனுமதிச்சீட்டைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட கிட்டத்தில் கண்ட 'அனுமதிச் சீட்டைக்' என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவும் ;—

"இந்த அனுமதிச்சீட்டையும் (4) குறிப்பிட்ட கிட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஸெர்டிபிகேட்டையும்."

நெ. 640.—(1914-ம் ௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம் ௵ மார்ச் ௴ 20௳யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லாடிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் செய்யும்படி அடியிற்கண்ட திருத்தத்தைக் களிகூர்ந்து வெளிவிடுகிறார்கள் :—

திருத்தம்.

ஷை விதிகளைச் சேர்ந்த 27-D விதியில் கண்ட முதல் வாக்கியத்துக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட வாக்கியத்தை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"சென்னை ராஜதானிப்பட்டணத்தில் பொலீஸ் கம்மிஷனரும் இதர இடங்களில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளும் - தங்கள் தங்களுடைய விசாரணை அதிகாரப் பிரதேசங்களுக்குள் மோடார் பஸ்ஸுகள் இன்ன இடங்களில் புறப்பட்டு இன்ன இடங்கள் வரையில் போகலாமென்று நிஷ்கரிஷை செய்யலாம்; அந்த இடங்களுக்கு மத்தியில் வாடகைக்கு விடப்படுவதற்காவது ஓட்டப்படுவதற்காவது அவைகளுக்கு அனுமதி கொடுக்கப்படும்."

நெ. 661.—(1914-ம் ௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம் ௵ மார்ச் ௴ 20௳யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லாடிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில் செய்யும்படி அடியிற்கண்ட திருத்தங்களைக் களிகூர்ந்து வெளிவிடுகிறார்கள் :—

திருத்தங்கள்.

I

ஷை விதிகளைச் சேர்ந்த 19-A விதியில் கண்ட இரண்டாவது வாக்கியத்துக்குப் பிறகு அடியிற்கண்ட வாக்கியங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

"சென்னை ராஜதானிப்பட்டணத்தில் அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - பொலீஸ் ஸர்ஜனால் பரீட்சை செய்துபார்க்கப்பட்ட பிறகு இந்த விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் L நமூனாப்படி ஒரு (மெடிகல்) வைத்திய ஸெர்டிபிகேட்டையுங்கூட ஹாஜர்ப்படுத்தவேண்டும். வண்டி ஓட்டுவதற்கான லைஸென்ஸ் வைத்திருப்பவர் யாதொரு மோடார் வண்டியை ஓட்டுவதற்குத் தேகதிடனுள்ளவராயில்லையென்று சந்தேகப்படுவதற்கு நியாயமிருப்பதாக பொலீஸ் கம்மிஷனர் அபிப்பிராயப்படுகிற பட்சத்திலே, வைத்தியரைக்கொண்டு மறுபடியும் பரீட்சை செய்துகொள்ளும்படி ஷை லைஸென்ஸ் வைத்திருப்பவருக்குக் கட்டளையிட அவருக்கு அதிகாரமுண்டு. மேலும், அவர் அந்த அபிப்பிராயத்தை எழுத்துமூலமாகப் பதியவேண்டும். மேலேகண்டபடி வைத்தியரைக்கொண்டு பரீட்சை செய்துகொள்வதற்காவது மறுபடியும் பரீட்சை செய்துகொள்வதற்காவது 2 ரூபாய் கட்டணம் செலுத்தத்தக்கதாகும்."

II

ஷை விதிகளைச்சேர்ந்த 30-D விதியில் கண்ட (1) குறிப்பிட்ட உபவிதியின் கடைசியில் அடி

பிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"சென்னை ராஜதானிப்பட்டணத்திலே, ஷை எழுத்துமூலமான அதிகாரச்சீட்டு யாருக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த நபர் 18 வயதுக்குக் குறையாத வயதுள்ளவரென்று பொலீஸ் கம்மிஷனரானவர் சாட்சியமூலமாகத் தெரிந்து திருப்தியடைந்தாலன்றி மற்றப்படி, அவர் அந்த எழுத்துமூலமான அதிகாரச்சீட்டில் மேற்கையெழுத்து போடக்கூடாது. வயதைக் குறித்து திருப்திகரமான சாட்சியம் எதுவும் ஹாஜர்ப்படுத்தப்படாவிட்டால், கம்மிஷனரானவர் பொலீஸ் ஸர்ஜனிடமிருந்து வயதைக் குறித்த ஒரு ஸெர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்தும்படி ஷை நபரைக் கேட்கலாம். ஷை ஸெர்டிபிகேட்டுக்காக 1 ரூபாய் கட்டணம் விதித்து வாங்க பொலீஸ் ஸர்ஜனுக்குப் பாத்தியதை உண்டு."

III

K நமூனாவுக்குப் பிறகு அடியிற்கண்ட நமூனாவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

L நமூனா - (மெடிகல்) வைத்திய ஸெர்டிபிகேட்.

சென்னை ராஜதானிப்பட்டணத்தில் மோடார் வண்டியை ஓட்டுவதற்கான லைஸென்ஸ் பெறுவதற்கு வண்டி ஓட்டுவதே தொழிலாகவுடைய யாதொரு வண்டி ஓட்டுகிறவர் செய்துகொள்ளும் விண்ணப்பத்துக்காக.

1. அவர் 18 வயதுக்குக் குறைந்த வயதுள்ளவரா? ……………
2. நீர் நன்றாய் நிதானிக்கக்கூடிய வரையில், விண்ணப்பதாரர் காக்கை வலியினாலாவது தலை சுழற்சியினாலாவது அவருடைய திறமையை வெகுசாய் பாதிக்கக் கூடிய யாதொரு மனோ வியாதியினாலாவது கஷ்டப்படுகிறாரா? ……………
3. வண்டி ஓட்டுகிறவராக அவருக்குள்ள அலுவல்களைச் செய்யவொட்டாமல் தடுக்கக்கூடிய இருதய சம்பந்தமான அல்லது சுவாசப்பை சம்பந்தமான யாதொரு வியாதியினால் விண்ணப்பதாரர் கஷ்டப்படுகிறாரா? ……………
4. (a) பார்வையில் குறை ஏதாகிலும் இருக்கிறதா? குறை ஏதாகிலும் இருந்தால், தகுந்த மூக்குக்கண்ணாடியால் அந்தக் குறை சரிப்படுத்தப்பட்டிருக்கிறதா? ……………

   (b) மாலைக்கண் என்னும் வியாதியினால் விண்ணப்பதாரர் கஷ்டப்படுகிறாரா? ……………

   (c) காதுகேட்பதில் குறை ஏதாகிலும் இருக்கிறதா? ……………
5. வண்டி ஓட்டுகிறவராக அவருக்குள்ள அலுவல்களைத் திறமையாய்ச் செய்யவொட்டாமல் தடுக்கக்கூடிய அங்கவிகாரம் அல்லது அங்கப்பழுது ஏதேனும் விண்ணப்பதாரருக்கு இருக்கிறதா? ……………
6. அவர் தம்முடைய அலுவல்களைச் செய்வதற்குப் போதுமான அளவுக்குச் சுறுசுறுப்புள்ளவராக இருக்கிறாரா? ……………
7. மதுசாரத்தையாவது புகையிலையையாவது லாகிரி வஸ்துக்களையாவது அவர் அபரிமிதமாக உபயோகிக்கும் வழக்கமுடையவரென்பதற்கு அவரிடம் ருஜு ஏதாகிலும் இருக்கிறதா? ……………
8. (a) தேக ஆரோக்கியத்தையும் (b) குணத்தையும் கவனிக்கும்போது மோடார் வண்டி ஓட்டுகிறவருடைய அலுவல்களைச் செய்வதற்கு அவர் பொதுவாகத் தகுதியுடையவரென்று நீர் அபிப்பிராயப்படுகிறீரா? ……………
9. இன்னாரென்று அடையாளம் கண்டுபிடிப்பதற்கான குறிகள். ……………

குறிப்பு.—தூரப்பார்வை விஷயமாகவும் கை, தலை, கைகளிலுள்ள பூட்டுகள் ஆகிய இவைகளின் நிலைமை விஷயமாகவும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

ஏ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மெண்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.